முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.
நாள். 10.04.2026.

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**அசல் வழக்கு எண். 95/2025**

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | எட்டி | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | கெங்கன் | வயது | : | 65 |
| ஊர் | : | அளத்துரை | தொழில் | : | விவசாயம் |

**வா.சா. 2 (எட்டி): வாதி தரப்பில் இரண்டாம் சாட்சியின் முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் 3ம் தரப்பினர் ஆவேன். வாதி தரப்பு இரண்டாம் சாட்சி (வா.சா.2) ஆவேன். என் தரப்பில் முதல் நிலை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டவையாகும். எனது பிரமாண வாக்குமூலத்தை படிக்க கேட்டு கையெழுத்து செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது சாட்சியத்தை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

**(கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(மு.கூ.பொ),
செய்யாறு